DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024

Prosecution Witness -P.W. 9

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர். பிரபாகரன் |
| Father's Name | : | Appathurai |
| Village | : | Pillayarvilai |
| Taluk | : | Agasteeswaram |
| Caste | : | Hindu Nadar |
| Calling | : | Doctor |
| Religion | : | Hindu |
| Age | : | 51 |
| Date | : | 13.06.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.06.2024.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

13.06.2024

முதல் விசாரணை :-

நான் தற்போது நாகர்கோவில் வெட்டூர்ணிமடம் சத்தியம் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிகிறேன். 28.08.2023 ஆம் தேதி மாலை 8.45 மணியளவில் மனோஜ் என்று சொல்லப்பட்ட நபரை அவசர சிகிச்சைக்காக கொண்டு வரப்பட்டார். ICU வில் அவரை பரிசோதனை செய்தபோது அவர் இறந்திருந்தார். அவருடைய உடலில் கீழ்கண்ட வெளிக் காயங்கள் இருந்தன.

1. கழுத்தில் 2 திசு சிதைவு காயங்கள் சுமார் 1x1x1 அளவில் வலது முன்பக்கத்தில்

இருந்தது.

2. வலது பக்க நெஞ்சு பகுதியில் சுமார் 8 x 1 செமீ அளவில் சிராய்ப்பு காயம் இருந்தது.

3. சுமார் 12 x 1 செ.மீ அளவில் வலது பக்கம் முதுகில் சிராய்ப்பு காயம் இருந்தது.

4. வலது கால் முட்டியில் சுமார் 3 x 2 செ.மீ. அளவில் சிராய்ப்பு காயம் இருந்தது.

5. வலது பாதத்தில் 2 x 2 செ.மீ. அளவில் சிராய்ப்பு காயம் இருந்தது.

6. இடது மார்பில் 5 x 1 செ.மீ. அளவில் சிராய்ப்பு காயம் இருந்தது.

7. இடது காலில் 3 x 2 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் இருந்தது.

8. திசு சிதைவு காயம் வலது காதில் 2 x 1 x 1 செ.மீ அளவில் இருந்தது.

மாலை 8.50 மணிக்கு வடசேரி காவல் நிலையத்திற்கு போன் மூலம் எங்கள் அலுவலகத்திலிருந்து இது குறித்து தகவல் சொல்லப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த தகவல் அறிக்கைதான். அது அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்) :-</u>

நான் அந்த மருத்துவமனையில் வேலை பார்க்கிறேன். அந்த மருத்துவமனையில் உரிமையாளர் டாக்டர். உமா மகேஸ்வரி. அந்த மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு மற்றும் Reception ஆகியவை CCTV கேமரா உள்ளது என்றால் சரிதான். CCTV கேமராவில் யார் எப்போது வந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள் என்ற விவரம் தெரியும் என்றால் இருக்கலாம் என்றால் என்ன என்றால் பொதுவாக பதிவாகும். உமா மகேஸ்வரி என்னுடைய மனைவி என்றால் சரிதான். CCTV கேமரா பதிவுகளை நீதிமன்ற உத்தரவு படி பார்ப்பதற்கு எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் உள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு கேமரா பதிவுகள் 6 மாத காலத்திற்கு தான் வைத்திருப்போம் அதற்கு மேல் இருக்காது. போலீசார் விசாரிக்கும்போது அந்த கேமரா பதிவுகள் குறித்து விசாரித்தார்களா என்றால் என்னிடம் விசாரிக்கவில்லை. அ.சா.ஆ. 9 ஆவணத்தை

மனோஜ் ஐ யார் மருத்துவமனைக்கு அழைத்து வந்தது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். சட்டம் சார்ந்த மருத்துவ வழக்கில் நோயாளியை யார் கூட்டி வந்தது என்பது அந்த படிவத்தில் குறிப்பிடப் பட வேண்டும் என்றால் சரிதான். இறந்தவருடைய வலது பக்க தலையில் எந்த சிராய்ப்பு காயங்களும் பார்க்கவில்லை என்றால் சரிதான். கழுத்தில் ஒரு காயம் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல இரண்டு காயங்கள் இருந்தன. சிராய்ப்பு காயம் கூர்மையான ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல ஏற்பட வாய்ப்பு உள்ளது. போலீஸ் கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறுதலாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் அ.சா.ஆ.9 Intimation தரப்படவில்லை என்றால் சரியல்ல.